| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# சமூக அறிவியல் / SOCIAL SCIENCE

[ Tamil Version ]

( New Syllabus )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

## பகுதி - அ

( மதிப்பெண்கள் : 30 × 1 = 30 )

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

சரியான விடையைத் தேர்வு செய்க :

1. இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1857 ஆ) 1885

இ) 1905 ஈ) 1909.

2. உள்ஆட்சியின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

அ) கர்சன் பிரபு

ஆ) ரிப்பன் பிரபு

இ) லிட்டன் பிரபு

ஈ) மின்டோ பிரபு.

3. தென் இந்தியாவில் உப்புச் சத்தியாக்கிரகத்தை முன்னின்று நடத்தியவர்

அ) காந்திஜி ஆ) இராசகோபாலாச்சாரியார்

இ) காமராஜர் ஈ) கான் அப்துல் கபார் கான்.

[ Turn over

4. கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| (i) | (ii) |
|---|---|
| அ) இராஜாராம் மோகன்ராய் | 1. இராமகிருஷ்ண மடம் |
| ஆ) டாக்டர் அன்னி பெசன்ட் | 2. பிரம்மஞான சபை |
| இ) சுவாமி விவேகானந்தர் | 3. அலிகார் இயக்கம் |
| ஈ) சர் சையது அகமது கான் | 4. பிரம்ம சமாஜம். |

சரியான விடையைத் தேர்வு செய்க :

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 2 | 1 | 3 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 3 | 2 | 1 | 4 |
| ஈ) | 2 | 1 | 3 | 4. |

5. கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| (i) | (ii) |
|---|---|
| அ) சைமன் குழு | 1. 1929 |
| ஆ) திட்டக் குழு | 2. 1927 |
| இ) லாகூர் காங்கிரஸ் | 3. 1947 |
| ஈ) மவுண்ட்பேட்டன் திட்டம் | 4. 1950. |

சரியான விடையைத் தேர்வு செய்க :

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 2 | 1 | 4 |
| ஆ) | 2 | 4 | 1 | 3 |
| இ) | 1 | 4 | 2 | 3 |
| ஈ) | 4 | 1 | 3 | 2. |

6. கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| (i) | | (ii) | |
|---|---|---|---|
| அ) | சர்தார் வல்லபாய் படேல் | 1. | சர்வோதய இயக்கம் |
| ஆ) | வினோபா பாவே | 2. | தேசியக் கல்விக் குழு |
| இ) | எச்.ஜே. பாபா | 3. | இந்தியாவின் இரும்பு மனிதர் |
| ஈ) | கோத்தாரி | 4. | அணுசக்தித் துறை. |

சரியான விடையைத் தேர்வு செய்க :

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 3 | 1 | 4 | 2 |
| இ) | 4 | 1 | 2 | 3 |
| ஈ) | 2 | 4 | 3 | 1. |

7. சரியான விடையைத் தேர்வு செய்க : ( கீழ்க்கண்டவற்றில் ஒன்று மட்டுமே சரியான குறிப்பு )

அ) விக்டோரியா அரசி பிரிட்டனின் அரசி ஆவார்

ஆ) 1885 ல் அரசி பேரறிக்கையை வெளியிட்டார்

இ) இதன்படி நாடுபிடிக்கும் கொள்கை தொடரும் என அறிவிக்கப் பெற்றது.

ஈ) எல்லாக் கிளர்ச்சியாளர்களுக்கும் மன்னிப்பு வழங்கப் பெற்றது.

8. சரியான விடையைத் தேர்வு செய்க : ( கீழ்க்கண்டவற்றில் ஒன்று மட்டுமே சரியான குறிப்பு )

அ) சுயராஜ்ஜியக் கட்சி தோன்றிய இடம் டெல்லி

ஆ) இரண்டாம் உலகப் போர் 1939 ம் ஆண்டு ஏற்பட்டது

இ) ஆகஸ்டு அறிக்கையை வெளியிட்டவர் மாண்டேகு

ஈ) முஸ்லீம்களுக்கு தனிநாடு வேண்டும் என்று கேட்டவர் நேதாஜி.

[ Turn over

9. சரியான விடையைத் தேர்வு செய்க : ( கீழ்க்கண்டவற்றில் ஒன்று மட்டுமே சரியான குறிப்பு )

அ) இந்தியாவின் முதல் பிரதம மந்திரி டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆவார்

ஆ) இந்தியாவின் முதல் ஜனாதிபதி ஜவஹர்லால் நேரு ஆவார்

இ) அபார்தீட் என்ற நிறவேற்றுமைக் கொள்கையைப் பின்பற்றிய நாடு சீனா ஆகும்

ஈ) சார்க் அமைப்பின் தலைமையிடம் காட்மாண்டு ஆகும்.

10. சரியான விடையைத் தேர்வு செய்க : ( கீழ்க்கண்டவற்றில் ஒன்று மட்டுமே சரியான குறிப்பு )

அ) சுதந்திரத்திற்கு முன் இந்திய சமஸ்தானங்களில் மிகப் பெரிய சமஸ்தானம் ஹைதராபாத்

ஆ) ஹைதராபாத்தின் பெரும்பான்மை மக்கள் முஸ்லீம்கள்

இ) ஹைதராபாத்தின் ஆட்சியாளர் இந்து

ஈ) இந்துக்கள் இரசாக்கர் இயக்கத்தைத் தொடங்கினர்.

கோடிட்ட இடங்களை சரியான விடை கொண்டு நிரப்புக :

11. நமது இந்தியக் குடியரசின் முதல் குடியரசுத் தலைவர் ........................ ஆவார்.

12. தமிழ்நாட்டில் ........................ என்ற இடத்தில் அணுமின் நிலையம் அமைந்துள்ளது.

13. மாநில ஆளுநரை நியமிப்பவர் ........................ ஆவார்.

14. இந்தியாவில் பொதுத் தேர்தல்கள் ........................ ஆண்டுகளுக்கொரு முறை நடத்தப்படுகின்றன.

15. இந்தியாவில் ........................ குடியுரிமை மட்டுமே உள்ளது.

சரியான விடையைத் தேர்வு செய்க :

16. இராஜ்யசபாவின் உறுப்பினர் எண்ணிக்கை

அ) 238

ஆ) 250

இ) 248

ஈ) 200.

17. இந்தியத் தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம்

அ) மும்பை

ஆ) புது தில்லி

இ) சென்னை

ஈ) கொல்கத்தா.

18. 'சிட்டிசன்' எனும் சொல் இம்மொழியிலிருந்து பெறப்பட்டது.

அ) கிரேக்கம்

ஆ) இலத்தீன்

இ) ஸ்பானியம்

ஈ) உருது.

19. தீபகற்ப இந்தியாவின் கிழக்கில் உள்ள தீபகற்பம்

அ) அரேபியா

ஆ) இந்தோ-சீனா

இ) இத்தாலி

ஈ) ஐபீரியா.

20. சட்லஜ் நதியின் குறுக்கே கட்டப்பட்ட அணை

அ) பக்ரா-நங்கல் அணை

ஆ) ஹிராகுட் அணை

இ) தாமோதர் அணை

ஈ) ஸ்டான்லி தேக்கம்.

21. மிகுதியாக பாக்ஸைட் உற்பத்தி செய்யும் மாநிலம்

அ) ஆந்திர பிரதேசம்

ஆ) பீகார்

இ) பஞ்சாப்

ஈ) தமிழ்நாடு.

22. கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| | *(i)* | | *(ii)* |
|---|---|---|---|
| அ) | ஆனைமலை | 1. | கனிமங்கள் |
| ஆ) | சாத்பூரா | 2. | கோடை வாழிடம் |
| இ) | கொடைக்கானல் | 3. | ஆனைமுடி |
| ஈ) | சோட்டா நாக்பூர் | 4. | ஏழு மடிப்புகள். |

சரியான விடையைத் தேர்வு செய்க :

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 2 | 1 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 4 | 2 | 1 | 3 |
| ஈ) | 2 | 1 | 3 | 4. |

23. கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| (i) | | (ii) | |
|---|---|---|---|
| அ) | காப்பி | 1. | தமிழ்நாடு |
| ஆ) | பருத்தி | 2. | கேரளா |
| இ) | நெல் | 3. | கர்நாடகம் |
| ஈ) | நறுமணப் பொருள்கள் | 4. | மகாராஷ்டிரம். |

சரியான விடையைத் தேர்வு செய்க :

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 2 | 1 | 4 | 3 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 4 | 1 | 3 | 2. |

24. கீழ்வருவனவற்றைப் பொருத்துக :

| (i) | | (ii) | |
|---|---|---|---|
| அ) | பெரம்பூர் | 1. | பருத்தி நெசவாலை |
| ஆ) | கோயம்புத்தூர் | 2. | தங்க வயல் |
| இ) | நெய்வேலி | 3. | இரயில் பெட்டி ஆலை |
| ஈ) | கோலார் | 4. | பழுப்பு நிலக்கரி. |

சரியான விடையைத் தேர்வு செய்க :

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 1 | 4 | 3 | 2 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 2 | 1 | 3 | 4. |

25. சரியான விடையைத் தேர்வு செய்க : ( கீழ்க்கண்டவற்றில் ஒன்று மட்டுமே சரியான குறிப்பு )

அ) இந்தியாவின் வடக்கு எல்லை இமயமலை

ஆ) இந்தியாவின் கிழக்கே அரேபிய தீபகற்பம் அமைந்துள்ளது

இ) மகர அட்சம் இந்தியாவின் குறுக்காக ஓடுகின்றது

ஈ) எவரெஸ்ட், சீனா நாட்டு எல்லையில் உள்ளது.

26. சரியான விடையைத் தேர்வு செய்க : ( கீழ்க்கண்டவற்றில் ஒன்று மட்டுமே சரியான குறிப்பு )

அ) கேரளாவில் தங்கம் கிடைக்கிறது

ஆ) கர்நாடகத்தில் அலுமினியத் தாது கிடைக்கிறது

இ) தாமோதர் பள்ளத்தாக்கில் நிலக்கரி கிடைக்கிறது

ஈ) தமிழ்நாட்டில் மாங்கனிசு கிடைக்கிறது.

27. சரியான விடையைத் தேர்வு செய்க : ( கீழ்க்கண்டவற்றில் ஒன்று மட்டுமே சரியான குறிப்பு )

அ) நெல் ஒரு புன்செய் பயிர் ஆகும்

ஆ) நெல் அதிக அளவு பஞ்சாபில் உற்பத்தி செய்யப்படுகிறது

இ) குறுவை ஒரு நீண்டகாலப் பயிர் ஆகும்

ஈ) தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சாவூர் ஆகும்.

28. சரியான விடையைத் தேர்வு செய்க : ( கீழ்க்கண்டவற்றில் ஒன்று மட்டுமே சரியான குறிப்பு )

அ) இந்திய இரயில் போக்குவரத்து முதன்முதலில் 1880 ல் ஆரம்பிக்கப்பட்டது.

ஆ) முதன்முதலில் இரயில் போக்குவரத்து மும்பைக்கும் பூனாவிற்கும் இடையே இயக்கப்பட்டது.

இ) இராஜஸ்தானி விரைவு வண்டி என்றழைக்கப்படும் அதிவேக இரயில் வண்டி தமிழ்நாடு மாநிலத்தில் ஓடுகின்றது

ஈ) தென்னக இரயில்வே மண்டலத்தின் தலைமையிடம் சென்னை ஆகும்.

கோடிட்ட இடங்களை சரியான விடை கொண்டு நிரப்புக :

29. ........................ இந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகின்றது.

30. நில நடுக்கோட்டு விண்கல ஏவுதளம் அமைந்துள்ள இடம் ........................ .

## பகுதி - ஆ

( மதிப்பெண்கள் : $10 \times 2 = 20$ )

குறிப்பு : i) வரலாற்றுப் பகுதியிலிருந்து **நான்கு** வினாக்களும், குடிமையியல் பகுதியிலிருந்து **இரண்டு** வினாக்களும், புவியியல் பகுதியிலிருந்து **நான்கு** வினாக்களும் தேர்ந்தெடுத்து மொத்தம் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) சுருக்கமான விடை தருக.

**வரலாறு** ( எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக )

31. ஆர்க்காட்டு வீரர் என்று அழைக்கப்படுபவர் யார் ? அவர் ஏன் அவ்வாறு அழைக்கப் படுகிறார் ?

32. பெரும் புரட்சியில் இராணி இலட்சுமி பாயின் பங்கு யாது ?

33. ஜாலியன்வாலா பாக் படுகொலை பற்றி சிறு குறிப்பு தருக.

34. சுயராஜ்ஜியக் கட்சி தொடங்கியது ஏன் ?

35. சார்க் நாடுகளின் பெயர்களை எழுதுக.

36. கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன ?

**குடிமையியல்** ( எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக )

37. கூட்டாட்சி என்றால் என்ன ?

38. நீதிமன்ற மறு ஆய்வினைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

39. தேர்தல் வகைகளை விளக்குக.

**புவியியல்** ( எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக )

40. இமயமலையை "இளம் மடிப்பு மலை" என அழைக்கக் காரணம் என்ன ?

41. வண்டல் மண்ணின் தன்மைகளை விவரி.

42. இந்தியாவில் காணப்படும் முக்கிய தாதுப் பொருட்கள் யாவை ?

43. 'மழைநீர் அறுவடை' என்றால் என்ன ?

44. இந்தியாவில் வான்வழிப் போக்குவரத்தினை நிர்வகிக்கும் அரசு நிறுவனங்கள் யாவை ?

45. களப்பணியில் என்னென்ன முறைகள் பின்பற்றப்படுகின்றன ?

## பகுதி - IV

( மதிப்பெண்கள் : 6 × 5 = 30 )

குறிப்பு : **i)** எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**ii)** ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள மாற்று வினாக்களில் ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்கவும்.

46. வில்லியம் பெண்டிங் பிரபுவின் சமூகச் சீர்திருத்தங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

*அல்லது*

சுதந்திரம் பெற்றது முதல் இந்தியாவில் ஏற்பட்டுள்ள அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியினை மதிப்பிடுக.

47. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் டாக்டர் அன்னி பெசன்டின் பங்கினை விவரி.

*அல்லது*

1857 ம் ஆண்டு புரட்சியின் விளைவுகளை எழுதுக.

48. நேர்முகத் தேர்தலின் நிறைகள், குறைகள் யாவை ?

*அல்லது*

ஒரு மாநில ஆளுநரின் அதிகாரங்கள், பணிகள் யாவை ?

49. இந்திய குடிமகனின் கடமைகள், உரிமைகளை விளக்குக.

*அல்லது*

மத்திய அரசின் அமைப்பு பற்றி விளக்குக.

50. இந்தியாவின் மக்கட்தொகைப் பரவலைப் பற்றி விரிவாக விவரி.

*அல்லது*

தென்மேற்குப் பருவக்காற்றின் தன்மையை - விவரி.

51. இந்தியாவை எழுச்சியுறும் இந்தியா ஆக்கும் திட்டங்கள் பற்றி கட்டுரை வரைக.

*அல்லது*

டாட்டா இரும்பு எஃகு ஆலை அமையத் தகுந்த சூழல்களைக் குறித்து விளக்குக.

## பகுதி - ஈ

( மதிப்பெண்கள் : 4 × 5 = 20 )

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

52. இந்திய வரைபடத்தில் ( Outline map of India ) கீழ்க்கண்ட இடங்களை சுட்டுக. மற்றும் டல்ஹௌசியின் ஆட்சிப் பரப்பைச் சுட்டுக.

அ) ஜான்சி

ஆ) நாக்பூர்

இ) மும்பை.

53. கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளை காலக்கோட்டில் அமைத்திடுக :

i) வெள்ளையனே வெளியேறு இயக்கம்

ii) ரௌலட் சட்டம்

iii) வங்கப் பிரிவினை

iv) இந்தியா குடியரசானது

v) சட்ட மறுப்பு இயக்கம்.

54. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் ( Outline map of India ) ஏதேனும் ஒன்றினைக் குறிக்கவும்.

அ) சென்னையிலிருந்து டெல்லி செல்லும் இரயில்வே மார்க்கம் ( இரு சந்திப்புகள் )

ஆ) பருத்தி விளையும் பிரதேசங்கள்

இ) பெட்ரோலியம் கிடைக்கும் பகுதிகள்.

55. சுகாதார பிரச்சனை பற்றி அறிய உன்னைச் சுற்றியுள்ள பகுதிகளில் நேர்காணலுக்கு வினாத் தொகுப்பு தயார் செய்க.

*குறிப்பு* : பார்வையற்ற மாணவர்கள் வரைபடத்தில் இடங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்குப் பதில் அவ்விடங்களைப் பற்றி குறிப்புகள் எழுத வேண்டும். காலக் கோடு வினாவிற்கும் குறிப்புகள் எழுத வேண்டும்.